சிறந்த வேலைப்பாடுள்ள
தங்க நகைகளை
விரும்பிய டிசைன்களில்
தெரிவுசெய்யவும்,
குறித்த தவணையில்
ஓடர்களைச் சிறந்த முறையில்
செய்விக்கவும்,
செ. சிவபாதலிங்கம்
வைரக்கல், நகை வியாபாரம்
220, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 ஆவணி 30 ஷவ்வா:11 இதழ்: 216
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 15-9-78

தென் இந்திய
சமய, சரித்திர, கலாச்சார சுற்றுலா
1978, மார்கழி முதல் வாரம்
கட்டணம்: ரூபா 890.
இலங்கையிலிருந்து செல்லும்
பிரயாணச் செலவு
விபரங்கள்:
சத்தியா ரவல்ஸ்
[இலங்கை உல்லாசப் பயணச் சபையால் அங்கிகரிக்கப்பெற்று அந்நியச் செலவாணி ஏற்றுக் கொள்ள அனுமதிபெற்றது.]
224/A கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7677

LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
PERIODICALS

# "திட்டமிட்டபடி செப்டம்பர் 28-ல் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம்"

## ஜனுப் அலவி மௌலானா அறிவிப்பு

(கொழும்பு)

இம்மாதம் 28ம்திகதி தொழிற் சங்கங்களின் கூட்டுக்கமிட்டியினுல் மேற்கொள்ளப்பட விருக்கும் ஒரு நாள் பொது அடையாள வேலைநிறுத்தம், திட்டமிட்டபடி நடக்கும் என்று ஸ்ரீலங்கா தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் ஜனுப்அலவிமௌலானு நேற்று மாலை அறிவித்துள்ளார்.

### அரசு எச்சரிக்கை

உத்தேச அடையாள வேலை நிறுத்தம் சம்பந்தமாக அரசு விடுத்துள்ள அறிக்கையில், ''எதிர்வரும் 28-ம் திகதி தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டியினுல் மேற்கொள்ளப் படவிருக்கும் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் பங்கு பற்றும் அரசாங்க அல்லது கூட்டுத்தாபன ஊழியர் அனைவரும், தத்தமது பதவியிலிருந்து விலகிக்கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள் என்றும், உத்தேச அடையாள வேலைநிறுத்தம் அரசியல் காரணங்களைக் கொண்டே நடைபெறுகிறதென்றும்'' தெரிவித்துள்ளது

### அரசியல் பழிவாங்கல்

ஸ்ரீலங்கா தொழிற்ச சம்மேளனத் தலைவர் ஜனுப் அலவி மௌலானு நேற்று வெளியிட்ட அறிக்கையில், அரசியல் பழிவாங்கலையும், சகல ஊழியர்களுக்கும் இடைக்கால அலவன்சாக 150 ரூபா வழங்குமாறு கோரியும் இந்த ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் திட்டமிட்டபடி நடைபெறுமென்றும், தொழிற்சங்கங்களின், கூட்டுக்கமிட்டி மீண்டும் இம் மாதம் 17ம் திகதி கூடும்-என்றும் தெரிவித்துள்ளார். (ம)

## அல்விஸ் பதவிப்பிரமாணம்; விஜயதுங்க தபாலமைச்சர்

(கண்டி)

திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்றுக் காலை கண்டி ஜனுதிபதி மாளிகையில் ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்னிலையில் ராஜாங்க அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் தகவல், ஒலிபரப்பு அமைச்சராகவும் பணிபுரிவார்.

இவருடன் மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. டி. பி. விஜயதுங்க, தபால் தொலைத்தொடர்பு அமைச்சராகவும்கண்டியில் பதவிப்பிரமாணம்செய்து கொண்டார்.

அமைச்சரவையில் அங்கம் வகிக்காத அமைச்சர்களான டாக்டர் ரஞ்சித் அத்தபத்து, திரு. ஹரல் பெரேரா, திரு. ரி. பி, வெரப்பிட்டியா ஆகியோரும் கண்டி ஜனுதிபதி மாளிகையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

## பிரதி அமைச்சர்கள் பட்டியல் விபரம்

(கொழும்பு)

கண்டி ஜனுதிபதி மாளிகையில் ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட இருபத்து மூன்று பிரதி அமைச்சர்கள் விபரம்:

ரி. பி. வெலகெதர: திட்ட அமுல்.

பி. ஸி. இம்புலான; உள்ளுராட்சி, வீடமைப்பு.

பேர்ஸி சமரவீர: பொது நிர்வாகம் உள்நாட்டு விவகாரம்.

அலிக் அலுவிகார; தோட்டக் கைத்தொழில்.

டபிள்யூ எம். ரி. பண்டா: கலாச்சாரம்,

எச். குலரத்ன: போக்குவரத்து.

கே. டி. எம். சி. பண்டார; விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி.

ஜோசப் மைக்கல் பெரேரா; தொழில்.

தர்மசேன ஆட்டிக்கலை-சுகாதாரம்.

ஆர். எம். தர்மதாசபண்டா -புடவைக்கைத் தொழில்.

ஏ. பி. பிலப்பிட்டிய- தபால் தொலைத்தொடர்பு.

ஷெல்டன் ரணராஜா- நீதி.

சரத்சந்திர ராஜகருணு- உணவு, கூட்டுறவு.

ரணில் விக்கிரமநாயக்கா- வெளிநாட்டு விவகாரம்.

ஏ. எம். அதிகாரி - காணி, காணி அபிவிருத்தி.

எட்வின் திலகரத்ன- பாராளுமன்ற விவகாரம், விளையாட்டு.

எம். எஸ். அமரசிறி-வர்த்தகம், கப்பல்துறை.

லயனல் ஜயதிலக - கல்வி, உயர்கல்வி.

நந்தா மத்தியூ - கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி,

சுனில் அபயசுந்தர- மீன்பிடி.

சந்திரா கருணுரத்ன -ராஜாங்கம்.

ரி. பி. வெரப்பிட்டிய-பாதுகாப்பு.

டென்சில் பெர்னுண்டோ - கைத்தொழில்,விஞ்ஞானம்.

அன்பர்களே! ஆதரவாளர்களே!
பாவனையாளர்களே! வாடிக்கையாளர்களே!
உங்கள் இனிதான வரவுடன் சிறப்பான குதூகலத்
திறப்புவிழா



கொழும்பு ரெக்ஸ்ரைல்
15-9-1978
இன்று
வெள்ளிக்கிழமை
காலை 6 மணிக்கு
மேல்வரும் சுபநேரத்தில்
கோலாகலமாகத் திறந்துவைக்கப்படும்.
ஆதரவாளர்களின் நல்வரவை நாடும்
கொழும்பு ரெக்ஸ்ரைல் நிருவாகத்தார்
பாவனையாளர்களுக்கு தேவையான சகலவிதமான ஜவுளித் தேவைகளுக்கும் நாடுங்கள்
கொழும்பு ரெக்ஸ்ரைல்
"மகேசன் கட்டிடம்"
109, பெரிய கடை,
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 0334

## பாண்டிச்சேரியில் ஆளும்கட்சியில் நெருக்கடி

புதுச்சேரி,செப் 14

''ஆளும் கட்சியில் ஊழல்'' என்ற குற்றச்சாட்டின் பேரில், பாண்டிச்சேரி சட்டசபையின் உறுப்பினர்கள் ஐவர் நேற்று ஆளும் (அ. அ. தி. மு. க.) கட்சியிலிருந்து விலகிக்கொண்டனர்! 30 அங்கத்தவர்களைக் கொண்ட சட்டசபையில் முன்னர் அ. அ. தி. மு. கழகத்தின் பலம் 17 ஆக இருந்தது ஐவர் விலகியதன்மூலம் இப்போது 12 ஆகக் குறைந்துள்ளது.

சட்டசபையில் ஏற்பட்ட இந்த நெருக்கடியைத்தொடர்ந்து, ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமைக்க ஜனதா கட்சியினர் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

## சிறிமா மனு: 22-ந் திகதி ஆணைக்குழுவினர் ஆஜராவர்

[கொழும்பு]

முன்னுள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ள மனுவை நேற்று விசாரணை செய்த நீதியரசர்கள்; ஜனுதிபதி விசேஷ ஆணைக்குழு நீதியரசர்கள் மூவரையும் இம் மாதம் 22ம் திகதி ஆஜராகுமாறு தெரிவித்துள்ளனர்.

ஜனுதிபதி விசேஷ ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கவோ தம்மை விசாரிக்கவோ, குடியுரிமையை ரத்துச் செய்யவோ ஆணைக் குழுவினருக்கு அதிகாரமில்லையென்றுதடையுத்தரவு விதிக்குமாறும் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தமது சட்டத்தரணி மூலம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் மனு மூலம் கோரியிருந்தார். இவரது சார்பாக சட்டத்தரணி திரு. எச். எல். டி. சில்வா ஆஜராஞர்.

மனுவை நேற்று விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் திரு. டி. விமலரத்ன, திரு. ஏ. வைத்திலிங்கம், திரு. கொலின் தோமே, ஜனுதிபதி விசேஷ ஆணைக்குழு அங்கத்தவர்களான நீதியரசர்கள் (பிரதிவாதிகள்) திரு. ஜே. ஜி. ரி, வீரரட்ண, திரு. எஸ். சர்வானந்தா, திரு. கே. ஜி. டி. அல்விஸ் ஆகிய மூவரையும் இம்மாதம் 22ம் திகதி ஆஜாராகுமாறு பணித்துள்ளனர். (ம)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஒஸ்ரின் கேம்பிறிக் [A 60] 5ஸ்ரீ 5483 கார் நல்லநிலைமை Floor Board Gears. 16-ம் 17ம் திகதி சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடவும். விலாசம்; Flat 45, Galle Face Courts 2, கொள்ளுப்பிட்டி. 0330

செல்வச்சந்நிதி முருகன் ஆலய கோபுரத்தின் முன்வீதியில் அமைந்துள்ள ''மில்க் வைற்'' விளம்பர விற்பனைக் காட்சிசாலையில் ''மில்க் வைற்'' தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு அழகிய பொலித்தீன் பையும், மேலுறைகளுக்கான அன்பளிப்புக்களும் வழங்கப்படும். மில்க் வைற்-யாழ்ப்பாணம். 0292

''கென்லூட் புருட் மிக்சர்'' புதிய மாடல் விற்பனைக்குண்டு. நல்லவிலை கோரப்படுகின்றது. விபரங்கள்: 224/A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0324

கல்கி, குமுதம், கல்கண்டு, மாலைமதி, சினிமா, பேசும்படம், தினமணி கதிர், வானொலி மஞ்சரி, மதராஸ் இந்து, இலஸ்ட்றேட்டட் வீக்லி, பிலிம்பெயர், பெமினா, நியூஸ்வீக், ஏசியாவீக், லங்கா கார்டியன், றீடர்ஸ் டைஜஸ்ட், ட்றிபியூன் முதலியன. விற்பனையாளர்கள், வாசகர்கள் தொடர்பு கொள்ளவும். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7631. 0325

சொந்தப் பாவனையிலுள்ள மொறிஸ் மைனர் கார்—EN 7954 விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறுகளில் கீழ்காணும் விலாசத்தில் பார்வையிடலாம் 22/2, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 0323

### தேவை

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் நல்ல தண்ணீருடன் வீடு விலைக்குத் தேவை. வே. நடராசா, சட்டத்தரணி, நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம். 0305

## இன்று ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பிரசித்திவாய்ந்த உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் தேர் இன்று வெள்ளி பிற்பகல் நடைபெறவுள்ளது.

அகில இந்திய தவில்மேதை திருச்சேறை ஜி. முத்துக்குமாரசாமிப்பிள்ளையின் விசேட தவில்கச்சேரியும் இடம் பெறும். நாளை பிற்பகல் தீர்த்தத்திருவிழா நடைபெறும்.

ஃ ஃ ஃ

நவாலி தெற்கு முருகமூர்த்தி கோவில் தேர் உற்சவம் இன்று காலை நடைபெறும். மறுநாள் காலை தீர்த்த உற்சவமும் 17-ம் திகதி பூங்காவன உற்சவமும் நடைபெறும்.

தேர் உற்சவ தினமான இன்று ''அருள் மிகு அந்திரான் முருகமூர்த்தி அருள் அமுதம்'' என்னும் ரதோற்சவ சிறப்பு மலரை நல்லை ஞானசம்பந்த ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத பரமாச்சாரிய சுவாமிகள் வெளியிட்டு வைப்பார்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் திருநாவுக்கரசு என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும், உடைமைப் பொருள்களினதும் விடயத்தில் மரணமெய்தியவர் சோமசுந்தரம் திருநாவுக்கரசு கைம்பெண் கண்மணி திருவடிநிலை, ஆனைக் கோட்டை.

-மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் வழ: இல: 3392/ரி

எதிராக

1. திருநாவுக்கரசு சோமேஸ்வரன்
2. திருநாவுக்கரசு றெமேஸ்வரன்.

இருவரும் திருவடிநிலை, ஆனைக்கோட்டை.

- எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிராகரிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1978ம் ஆண்டு புரட்டாதி மாதம் 22ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றுவதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1978ம் ஆண்டு புரட்டாதி மாதம் 6ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி.
(ஒப்பம்)
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்

தயாரித்தவர்
ஒப்பம்
**வ. மயில்வாகனம்**
மனுதாரின் சட்டத்தரணி. 0280

## அடைவு நகை ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் இலக்கம் 222 கே.கே.எஸ். வீதியில் அடைவு பிடிக்கும் கந்தையா பரமு அடைவுநிலைய உரிமையாளர் திருமதி ச. பரமு அவர்களின் அடைவுகடையில் 1973-ம் ஆண்டு ஆனிமாதம் 1-ம் திகதி தொடக்கம் 1977ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ந் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1978-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 29ந் திகதி [29-9-1978] வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையிலிருந்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

சி.ஆ. த. வடிவேலு ஜே.பி.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
ஏலவிற்பனையாளரும்.
''வடிவேல் உதயம்''
கே. கே.எஸ். வீதி,
கோண்டாவில். 0332

## பேரறிஞர் அண்ணா நினைவு தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

உலகத்தமிழர் தம் நெஞ்சங்களில் இரண்டறக் கலந்துவிட்ட பேரறிஞர் அண்ணாவின் நினைவு தினம் இன்றாகும்.

இலங்கை, இந்தியாஉட்பட பல நாடுகளிலும் இதனையொட்டி பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. (உ)

# 'நியமனம் செய்தகுழுவுக்கு நீக்குவதற்கும்உரிமையுண்டு'

## -- ஜி. ஜி. பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

எந்தச் செயற்குழுவால் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தற்காலிக தலைவரும் தற்காலிகப் பொதுச் செயலாளரும் நியமிக்கப்பட்டார்களோ அதே செயற்குழுவால் அவர்கள் அப்பதவியிலிருந்து விலக்கப்படவும் உரிமையுண்டு என்று அ. இ. த. காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் கூறியிருக்கிறார்.



திரு. ரி. சிவசிதம்பரம் எம். பி. கடந்த 7-9-78-ல் வெளியிட்டிருந்த அறிக்கைக்கு பதிலளிக்குமுகமாக திரு. பொன்னம்பலம் இப்போது இவ்வறிக்கையை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கை விபரம் வருமாறு:

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் இருந்து அதன் உயர் அதிகார பீடமான செயற்குழுவினரால் கட்சி விசுவாசமற்ற போக்கு, கடமையைப் புறக்கணித்மை செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமை ஆகிய காரணங்களுக்காக கட்சியில் இருந்து ஏகமனதாக வெளியேற்றப்பட்டவர்களுக்கும் கட்சிக்கும் இனி எந்தவிதமான தொர்டர்பும் கிடையாது.

எந்தச் செயற்குழுவால் 6-3-77-ல் தற்காலிகத் தலைவராகவும் தற்காலிகப் பொதுச் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்களோ அதே செயற் குழுவால் சட்டவிதிகளுக்கு மாறாக, கொள்கைக்கு மாறாக, தொண்டர்களின் கருத்துக்கு மாறாக நடந்தவர்கள் பதவிகளிலிருந்தும், கட்சியில் இருந்தும் வெளியே தள்ளப்படுள்ளார்கள். இந்த உண்மையை அறிக்கைகளால் மூடி மறைத்துவிட முடியாது.

திரு தா. சிவசிதம்பரம் உண்மைக்கு முற்றிலும் மாறான விடயங்களைக் கூறி மக்களைக் குழப்பித் தாமும்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம் பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நாகலிங்கத்தின் பெண் நாகம்மாவின் மரணசாதனத்தினதும் உடைமைப் பொருளினதும் விடயத்தில் மரணமெய்தியவர் செல்லையா அமிர்தலிங்கம் சண்டிலிப்பாய்

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம், வழ. இல: T/2870

எதிராக

வேலுப்பிள்ளை நாகலிங்கத்தின் மகள் மகேஸ்வரி வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை

எதிர் வாதி

மேலேயுள்ள இலக்கங்கள் கொண்டமரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதன மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரேனும் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1978ம் ஆண்டு ஆவணி மாதம் 28ம் நாள்.

ஒப்பம்:
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்

தயாரித்தவர்:
ஒப்பம்:
**வ. மயில்வாகனம்**
மனுதாரின் சட்டத்தரணி 0281

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: M B / 10671

1. (மூடப்பட்ட) யாழ்ப்பாண பரஸ்பர சேமலாபக் கொம்பனி வண்ணார்பண்ணை (மட்டுப்படுத்தப்பட்டது) இல: 147, 1ம் மாடி ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

1. M. குளந்தைவேலு கதிரவேலு
மலேயன் கபே - பெரியகடை
யாழ்ப்பாணம்.

—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B / 10671ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978ம் ஆ புரட்டாசி மீ 27ம் உ புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 50,000/ம் கோட்டுச் செலவு ரூபாய் 767/89ம்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை ''அனின் சிலடியும் பத்திறத்திடலும்'' நி. பர. 1ம் குளி 4 27/32ம் புதிதாகக் கட்டிய கடைக் கட்டிடமும் (மதிப்பீட்டு இலக்கம் 36 வட மாக்கெற் றோட், பெரியகடை யாழ்ப்பாணம்) வீடும் கிணறும் இதைச் சேர்ந்தவைகளும் இவை உத்தரவுபெற்ற உலாந்தர் V. சண்முகலிங்கத்தால் 22-1-1941 இல் வரையப்பட்ட இல: 1495A எனும் படத்தில் 2ம் துண்டென காட்டப்பட்டுள்ளது. இப்படத்தில் 'Y' எனக் காட்டப்படும் கிழக்கே செல்லும் ஒழுங்கையை தொடும் பொதுப் பாதையின் பாவிப்புரித்தும் மேற்கூறிய காணிக்குண்டு இதன் எல்லை கிழக்கு குருசாமிச் செட்டி நாகலிங்கம்செட்டி பெண் ஆச்சிக்கண்ணம்மாவினுதனம், வடக்கு மேற்கூறிய படத்தில் காட்டிய படத்தில் 'Y' எனும் பொதுப் பாதையும் காதர் மொகிடீன் பெண் கதிஉம்மாவினுதனமும், மேற்கு காதர் மொகிடீன் பெண் கதிஉம்மாவினுதனமும் சுல்த்தான் சிக்கந்தரினின் ஆதனமும், தெற்கு சுல்த்தான் சிக்கந்தரினினுதனமும் றோட்டும் - பதிவு இலக்கம் D241/95ம் D 352/49ம்.

ஜே. ஏ. எட்வேட்,
கொம்மிஷனரும்
விலைமதிப்பாளரும்

நாரந்தனை தெற்கு
ஊர்காவற்றுறை.
31-8-78 0328

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு/14654

1. குமாரவேலு கந்தையாவும் பெண்
2. சுந்தரமும் இருவரும்
காரைநகர்.

வழக்காளி

எதிராக

1. சுப்பிரமணியம் தியாகராசாவும் பெண்
2. பாலாம்பிகையும் இருவரும்
இல. 202/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு/14654-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1978-ம் வருஷம் ஒக்டோபர் மாதம் 2-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிச்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபாய் 13,730/-ம் 28-11-74 தொடக்கம் 31-7-75 வரைக்கும் ரூபாய் 10,000/-க்கு 12% வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 640/08ம் இதில் முன் கட்டப்பட்ட ரூபாய் 8500/-ம் செலவில் ரூபாய் 500/-ம் நீக்கி.

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை ''வண்ணான் தோட்டமும் மானிக்கன் தோட்டமும்'' அல்லது ''மானிக்கன் தோட்டம்'' நி. பர. 2ம் குளி 16½யும் வீடும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் இதன் எல்லை கிழக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் ஆதனமும் அன்னசத்திரத்தினுதனமும், வடக்கு ஒழுங்கை முகப்பும் சுப்பிரமணியம் தியாகராசாவும் பெண் வாலாம்பிகையினுதனமும், மேற்கு மயிலுவின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், தெற்கு பொன்னையா செட்டி செல்லையாவினுதனம்-இதடங்கலும்.

ஜே. ஏ. எட்வேட்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

நாரந்தனை தெற்கு
ஊர்காவற்றுறை,
31-8-78. 0327

ஈழநாடு
The Eelanadu

## பெற்ருர் மகாநாடுகள்

இன்றைய மாணவர்கள்தாம் நாளைய தலைவர்கள் என்று பொதுவாகக் கூறுவதுண்டு.

இன்று மாணவர்களாய் இருப்பவர்கள் அனைவருமே எதிர்காலத்தில் தலைவர்களாக வந்துவிடுவார்கள் என்பதல்ல இதன் கருத்து.

இன்று சிறுவர்களாக இருப்பவர்கள்தாம் எதிர்காலத்தில் நாட்டின் ஆட்சியை நிர்ணயிக்கும் பிரஜைகளாவார்கள் - அவர்களிலிருந்தே சிறந்த தலைவர்களும் உருவாகுவார்கள்.

இன்னெருவகையில் கூறுவதாஞல் இன்றைய சிறுவர்களின் கையில்தான்எதிர்காலத்தில் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு வந்துசேரும். எனவே இன்றைய மாணவர்கள் நீதி, நேர்மை, ஒழுக்க சீலமுள்ள நற்பிரஜைகளாக வளர்த்தெடுப்பது பெற்ரேரின் பொறுப்புமாத்திரமல்ல, இந்தச் சிறுவர்களின் கல்வித்துறையைத் தன்வசம் வைத்துக்கொண்டுள்ள அரசாங்கத்தின் தலையாய கடமையுமாகும்.

கல்வித்துறையில் ஏற்பட்ட சீர்கேடுகளிஞலும், நிர்வாக முறைகேடுகளிஞலும் கடந்த காலத்தில் பாடசாலைகள், கல்லூரிகள் மாத்திரமின்றி பல்கலைக் கழகமட்டத்திலும் மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் குன்றியது. கல்வித்துறையில் அமைதி குலைந்தது. கல்வியில் அக்கறை செலுத்தவேண்டிய மாணவர்கள் அரசியல் பகடைக் காய்களாகமாறி தெருக்களில் 'போர்க் கொடி' ஏந்தி கோஷங்களை எழுப்பிக்கொண்டு பவனிவரும் காட்சிகளைக் காணநேர்ந்தது.

இந்த நிலைமையைமாற்றி புதிய ஒரு இளம் சமுதாயத்தை உருவாக்க கல்வி அமைச்சரும் அரசாங்கமும் இப்பொழுது பெருமுயற்சி எடுத்துவருவது மகிழ்ச்சியளிப்பதாகவிருக்கின்றது.

பல்கலைக்கழகங்களில் பெற்ருர்தினங்களை மாதந்தோறும் நடத்துவதற்கு அமைச்சர் முடிவு செய்திருப்பது இந்த நடவடிக்கைகளில் ஒன்று என்றே கருதலாம்.

சாதாரண பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் முன்பு பெற்ருர் - ஆசிரியர் சங்கங்கள் இயங்குவது தடைபட்டதனல் கல்வி நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன் ஆசிரியர்-மாணவர் உறவுகள் சீர்குலைந்து கல்வி நிலையங்களில் ஒழுக்க சீர்கேடுகளும் பெருக ஆரம்பித்தன.

இப்பொழுது மீண்டும் இந்தப் பெற்ருர்-ஆசிரியர் சங்கங்கள் இயங்க ஆரம்பித்திருக்கின்றன. பாடசாலைகளின் நிர்வாகத்தில்பெற்ருரின் யோசனைகளையும் பெற்றுக் கொள்ளும் வகையில் இவை இயங்க வேண்டும்.

பல்கலைக்கழகத்தில் பெற்ருர் மகாநாடுகள் எந்த அடிப்படையில் நடைபெறும் என்று இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனல் தம் பிள்ளைகளின் முன்னேற்றம்பற்றியும் அறிந்து கொள்வதற்கு இதன்மூலம் பெற்ருருக்கு வாய்ப்பு ஏற்படும் என்று நம்பலாம்.

தம் பிள்ளைகள் நல்ல முறையில் படித்து வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற நம்பிக்கையிலேயே பெற்ருேர் பெரும்பணச் செலவுகளையும் பொருட்படுத்தாமல் அவர்களைப் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்புகிருர்கள். இந்த நம்பிக்கை வீண் போகாமல் காப்பாற்ற வேண்டியது பிள்ளைகளின் கடமைதான். ஆஞல் சந்தர்ப்ப சூழ்நிலைகளிஞலும் தவருன முன்மாதிரிகளிஞலும் இவர்கள் வழி தவற நேர்கிறது.

எனவே அமைச்சர் உத்தேசித்திருப்பதுபோல அடிக்கடி தமது பிள்ளைகளின் நடவடிக்கைகள்பற்றிய விபரங்களை நேரடியாக அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் பெற்ருருக்குக் கிடைக்குமாகில் அவர்கள் வழி தவறிப் போவதைப் பெரும்பாலும் தடுத்துவிட முடியும். இந்தவகையில் அமைச்சரின் நடவடிக்கையை பெற்ருேர் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்று நம்பலாம்.

# தீராப்பிணி அகற்றும் அற்புதத் தெய்வம்

## சந்நிதி முருகன் இன்று தேர்ப்பவனி

மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற செல்வச்சந்நிதி முருகப்பெருமானின் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை விமரிசையாக நடைபெறுகிறது. நாளை சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும், அன்றிரவு மௌனத் திருவிழாவும் நடைபெறும்.

ஆலயத்தின் மேற்குப் புறத்தே தொண்டமாஞறு கடல் பாய்ந்து வடக்கு நோக்கிச் சென்று சமுத்திரத்தில கலக்கின்றது.

### அன்னதானக் கந்தன்

செல்வச்சந்நிதியில் அருள் ஒளி வீசும் வேலை வைத்த்த வழிபாடு செய்கின்றனர். மந்திரங்கள் ஜெபிக்காது,வாயை துணியால் கட்டி, தீப ஆராதனை செய்து வருவது அங்கு பூசை செய்பவர்களின் மரபு முறையாகும். ஆலமிலையில் அமுதுபடைத்தலும் ஒரு முறையாக தொன்று தொட்டு நிலவி வருவதால் போலும், இவ்வாலயத்தைச் சூழஉள்ள சகல மடங்களிலும் அன்னதானங்கள் தினசரி நடைபெறுவதுண்டு. இதனுல் செல்வச்சந்நிதி முருகனை 'அன்னதானக் கந்தன்' எனவும் அடியார்கள் அழைப்பர்.

### தீராதவினை தீர்ப்பவன்

தீராதவினைகளைத் தீர்ப்பதற்காக, எத்தனையோ மக்கள் முருகனை வேண்டி மடங்களில் தங்கி தவமிருக்கிருர்கள்.

சகல ரோக பிணியுற்ருேர், கைகால் ஊனமுற்ருேர், கண் தெரியாத கபோதியர், வாழ்க்கையில் விரக்தியுற்றவர்கள், புத்தி சுவாதீனமற்றவர்கள், ஊழ்வினைப் பயனில் உழன்று மாருவினையில் மூழ்கியோர், ஆலயத்தின் மேற்கில் ஓடுகின்ற தொண்டமாஞறில் மூழ்கி, பின் ஆலயக் கேணியில் தங்க வினைமாள தோய்ந்துவர, மாருத நோயும் மாறியது கண்கூடு.

### சாதாரண நாட்களிலேயே...

சாதாரண நாட்களிலேயும், காவடி, கரகமாட்டங்களுக்குக் குறைவில்லையென்ருல், திருவிழா உற்சவங்களில் எப்படியிருக்கும்? அப்பப்பா! வடபகுதியில் எங்கெங்கெல்லாம் இருந்தும் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும், சிறுமியர்களும், வயதுசென்ற பாட்டா பாட்டிகளும் கூட காவடிகளும், கரகங்களும், அலகிலும், முதுகிலும் உடம்பின் சுகல அவயங்களிலும் வேல்கள்பாய்ச்சி செல்வச்சந்நிதி முருகனை வரம்வேண்டி, நேர்த்திக் கடனை நிறைவேற்ற, மங்கள - முரச - உடுக்குவாத்தியங்கள் முழங்கி வரும் காட்சிகளை காணுத கண் என்ன கண்ணே.

### அரோகரா கோஷங்கள்

அரோகரா கோஷங்களும், பஜனைக் கோஷங்களும், தாள ஓசைகளும், பேயாட்டங்களும், ஆனந்தக் கூத்துக்களும் ஆட பக்தர்கள் நாலர் பக்கமும் புடைசூழ அடியார்கள் அங்கப்பிரதட்சணம் செய்ய பெண்கள் அடியளிக்க - வேல் முருகன் தேரில்



பவனி வருவதும், ஆறுமுக சுவாமி வள்ளி தேவயானையுடன் மஞ்சத்தில் வருவதும் ஒரு தனிக் காட்சிதான்.

### இன்று தேர் உற்சவம்

இன்றுகாலை 7-30-க்கு வேல் முருகன் தேருக்கு எழுந்தருளி பின்பு வீதிவலம் வந்து தேர் இருப்பிடத்துக்குசேர்ந்தபின்பு தான் அர்ச்சனைகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளை காலை தளப்பத் தோலைகளால் காவடி போல் கட்டப்பட்டு, பட்டுச் சேலையால் மறைக்கப்பட்ட பல்லக்கில் வேல்முருகன் தீர்த்தம் ஆடவரும் காட்சி சொல்லி முடியாது.

தளப்பத் தோலைகளுடன் முருகன் பவனி வருகையில் அடியார்கள் ஆனந்தக் கண்ணீர் சிந்த ஆடும் ஆட்டம் தான் என்னே!

இதஞல் 'காவடிக் கந்தன்' என்றும் செல்வச்சந்நிதி முருகன் அழைக்கப்படுகின்ருன்.

என்னதான் கஷ்டங்கள் நம்மைச் சூழ்ந்த போதிலும் ஒருதரம் இந்த செல்வச்சந்நிதி முருகனை நினைத்து உருகி நின்ருல் அந்தக் கஷ்டங்கள், அந்த வினைகள் எல்லாம் நம்மை விட்டகலுமன்ருே!

--ஏ. வி. மாணிக்கம்

# வேதாகம உபநிடதங்களின் முடிபின்பயனே சைவம்

பண்ணிசைக்கலாநிதி
எஸ். கே. சிவபாலன்

வெள்ளிவிருந்து-4

வேதநெறி தழைத்தோங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும் திருவவதாரம் செய்தருளியவர் சம்பந்தப்பெருமான். பிள்ளையார் அருளிய திருப்பதிகங்களில் வேதச் சிறப்பும் வேதங்களில் விதிக்கப் பெற்றுள்ள வேள்விகளின் களின் நற்பயனும் நாண்மறை அந்தணர்களின் மாண்பும் நன்கு விரித்துரைக்கப் பெற்றுள்ளன. உலகியல் வழக்காறுகளை விரித்துரைக்கும் நால்வேதங்களின் வழி ஒழுகுதலாகிய வேதநெறியை வைதிகநெறி எனவும் அழைப்பர் பெரியோர். வேதத்தின் முடிவுகளாகிய உபநிடதங்

(5-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

பிறரிடம் இருக்கும் எந்தக் குணத்தை நீங்கள் வெறுக்கிறீர்களோ அந்தக் குணத்தை அண்டவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

—ஸ்பிராட்.

புதிய
ஹெடோஞல் 'எம்'

40% எம். சி. பி. ஏ. மற்றும் சோடியம், பொட்டாசியம் ஆகிய உப்பு அடங்கிய களை கொல்லி.

பயிர்க் கொல்லி களை விட்டு வைக்காமல் வேரோடொழிக்கும். உறுதியாக அதிக லாபம் தரும்.



விளைபொருள்களை உறுதுணை நின்று காக்கும் ஹெடோஞல் 'எம்',

நெல், கரும்பு, சோளம், மற்றும் புற்றரைகளைப் பாதிக்கும் அகன்ற இலைக்களைகளையும், புதர்ச் செடிகளையும் செப்பமாகவும் சிக்கனமாகவும் ஒழித்துவிடும்.

பயிர்களையும் பண லாபத்தையும் பாதுகாக்கப் பாவியுங்கள் ஹெடோஞல் 'எம்'.

நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள்—
பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்!

| | |
|---|---|
| மூலப் பொருட்சத்து உற்பத்தியாளர் : | இலங்கையில் தயாரிப்போர் : |
| பேயர் | ஹேக்கெம் லிமிடெட் |
| ஜெர்மனி | 400, டீன்ஸ் வீதி, |
| | கொழும்பு 10. |



P-91246

# கிளிநொச்சி முருகனலயரதோற்சவச் சிறப்புமலர்

## கிளிநொச்சி முருகன் ஆலய முன்னேற்றத்திற்கு உதவுக

யாழ் மாவட்டத்தின் நெற்களஞ்சியமாக கிளிநொச்சிப் பிரதேசம் துலங்குகின்றது. யாழ்ப்பாணப் பகுதியின் பல பாகங்களிலுமிருந்து பல ஆயிரக் கணக்கான மக்கள் குடியேறி இப்பிரதேசத்தை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றியுள்ளார்கள். இரணைமடுக் குளம் இப்பிரதேசத்தின் வனப்புக்கும் வளத்திற்கும் வழி வகுக்கின்றது. களனிகள் நிறைந்த, பலஆயிரம் சைவர்கள் வாழ்ந்த இப்பிரதேசத்தில் ஓர் சைவஆலயம் இன்மையால், இப்பகுதி சைவர்களுக்கு ஓர் வழிபாட்டுத்தலம் இன்மை ஒருபெருங்குறையாய் இருந்தது. ''கோவில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பது ஆன்றோர் வாக்கு'' இதை ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முன் உணர்ந்த இப்பகுதி சைவப்பெரியார்கள், கிளிநொச்சிப் பதியிலே குமரனுக்கு கோவில் கட்டும் பணியில் ஈடுபட்டார்கள்.

இப்பணியிலே முன்னின்று உழைத்தவர் மூகாந்திரம் சி. வெற்றிவேலு விதானையார் அவர்கள். அவருடைய உறுதியான எண்ணமும், முருகசிந்தையுமே முருகன் ஆலயம் உருவாவதற்கு காரணம் எனக் கூறுவது மிகையானதல்ல. வனமும், வனவிலங்குகளும் நிறைந்த இப்பிரதேசத்தில் எத்தனையோ இடர்களுக்கும், துன்பங்களுக்கும் மத்தியில் இவ்வாலயம் அமைக்கும் பணியில் ஈடுபட்டு மகா கும்பாபிஷேகம் செய்துவைத்த அந்த வள்ளல் பெருந்தகையின் சைவத்தொண்டை கிளிநொச்சி சைவமக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள். சிறுகொட்டிலாக ஆரம்பித்த முருகன் ஆலயம் பரிணமித்த உருவம்பெற பலருடைய உழைப்பும் ஆசியும் உறுதுணையாக இருந்ததையும் நாம் மறக்கமுடியாது.

### பரிபாலன சபை

முகாந்திரம் சி. வெற்றிவேலு அவர்கள் காலமானதைத் தொடர்ந்து ஆலய வளர்ச்சி சற்று தாமதப்பட்டது. ஆலய வளர்ச்சிக்கு ஒரு பரிபாலனசபை அமைத்து நடாத்தவேண்டும் என்ற எண்ணம் பலருடைய உள்ளத்திலே உருவாகியது. அந்த எண்ணத்தை உருவாக்கும் பணியில் கிளிநொச்சி திருநெறிக் கழகம் முன்னின்று உழைத்தது. கழகத்தின் செயலாளராக இருந்த திரு. த. நல்லதம்பி அவர்களின் விடா முயற்சியினால் 11-8-64ல் ஆலய பரிபாலனசபை உருவாக்கப்பட்டது. ஆலய பரிபாலன சபையின் தலைவராக முன்னாள் கிளிநொச்சிநாடாளுமன்ற உறுப்பினரும், சைவப் பெரியாருமாகிய உயர்திரு. அ. சிவசுந்தரம் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார் அன்னாரின் காலத்தில் ஆலயத்தின் பல திருப்பணி வேலைகள் நடைபெற்றன. ஆலய பரிபாலன சபையின் கட்டுப்பாட்டின்கீழ் பல ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன.

### குறை நீங்கிற்று

ஆலய பரிபாலன சபையின் காலத்தில், கிளிநொச்சிப் பகுதியில் கொடியேற்று உற்சவம் இல்லாதகுறை நீக்கப்பட்டது டரிபாலன சபையின் முயற்சியால், கிளிநொச்சி நீர்ப்பாசன இலாகாவின் பெருநிதியோடு, கொடியேற்று உற்சவம் நடைபெறவேண்டிய

[5-ம் பக்கம் பார்க்க]

ஆ. சி. முருகேசு
(ஆலய பரிபாலனசபைத் தலைவர்)

## தமிழர்களும் திருவிழாக்களும்

திருவிழா என்பது தமிழருக்கே உரியதொன்றாகும் என்றால் அது மிகையாகாது. தமிழர் சாதி-சமயம் அற்றவராய் இருந்த முன்னாளிலும் விழாக்களைக் கொண்டாடி வந்திருக்கின்றார்கள். சிலப்பதிகாரத்தில் வரும் இந்திரவிழா இக்கூற்றிற்கு ஆதாரம் சமயங்களின் தோற்றத்தைபடுத்து விழாக்கள் பலவாயின.

இவ்வாறு சமயத்தின் தாக்கத்தால் சாதாரண விழாக்களும் திருவிழாவாக மாறின. இரண்டும் ஒன்றல்ல என்ற விதியும் ஏற்பட்டது. சாதாரணமாக நித்தியமும் நடப்பவை விழாக்களாகவும் அவற்றின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வருடத்தில் ஒருமுறை நடப்பவை திருவிழாக்களாகவும் கொள்ளப்பட்டன. திருவிழாவில் விசேட பூசை, விசேட கிரியைகள் என்பன அதன் உயர்வை காட்டுகின்றன.

''மனிதனே தெய்வம்'', ''மனிதனுக்குள்ளேதான் தெய்வம்'', ''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு''என்பன சைவசமயத்தின் மூலக்கொள்கையாகும். கோவிலின் அமைப்பு, குத்து விளக்கு, தேர் என்பன மனித அவயங்களை அடிப்படையாய் கொண்டு அவற்றைப் பிரதிபலிப்பனவாய் உருவாக்கப்பட்டன. இதன் உட்பொருள் யாதெனில் மனிதனைகப் பாவனை செய்து வணங்குதல் ஆகும். பாவனை செய்தல் என்பது சைவத்தின் பெருமைக்குரியவொன்றாகும். இவ்வாறு பாவனை செய்து வணங்கும் முறைக்குத் தேரின் அமைப்பு முக்கியமானதாகும். மனிதனின் இதயம் உள்ள

(5ம் பக்கம் பார்க்க)

## உய்யவழி தந்திடுவாய்

சீர் கொண்டு கவி பாட வேண்டும் — என்
சிந்தையில் உன்நினைவாக வேண்டும்
கார் கொண்டு மழை பெய்ய வேண்டும் — என்
கவிதைக்குக் கடல் கூட நாணவேண்டும்
பேர் கொண்டு புவியாள வேண்டும் — என்
பெருமைக்குக் கந்தனே பொருளாக வேண்டும்
தேர் கொண்டு நீ ஆட வேண்டும் — நான்
தேன் தமிழில் உன் புகழே பாடவேண்டும்

(வேறு)

தேர் ஏறி வரும் எங்கள்
தெய்வத் திருக்குமரா!
சீர் ஏறி வரும் கவிதை
செய்திருக்கு பாராய்
பேர் ஏறி வாழ் தமிழர்
பெருமையெல்லாம் உன்னாலே
ஊர் ஆடி வலம் வந்து
உய்யவழி தந்திடுவாய்

-- சின்ன. இராஜேஸ்வரன்

**நியூசுந்தரம்ஸ் பிடவை மாளிகை**
பஸ்நிலையம் - கிளிநொச்சி.
போன்: 289

**சாரதா கூல்பார்**
(பத்திரிகை சஞ்சிகை விற்பனையாளர்)
பஸ்நிலையம் - கிளிநொச்சி.

**யாழ்ஸ்பொட் கூல்பார் அன் கோப்பிபார்**
பஸ்நிலையம் - கிளிநொச்சி.

**ஸ்ரீ சக்தி றேடர்ஸ்**
[பலசரக்குவியாபாரிகள்]
கண்டிவீதி - கிளிநொச்சி.

**வரதன் ஸ்ரோர்ஸ்**
(மொத்த.சில்லறை வியாபாரிகள்)
கண்டிவீதி, (போன்- 271) கிளிநொச்சி.

**வேலவன் ஸ்ரோர்ஸ்**
பஸ்நிலையம் - கிளிநொச்சி.

**அக்றோ றேடர்ஸ்**
[சீமேந்து-பசளை- கிருமிநாசினி வியாபாரம்]
கண்டிவீதி - கிளிநொச்சி.
கிளை: விசுவமடு.

**ஏ. எஸ். என். அன் சன்ஸ்**
[மிளகாய் கொள்வனவு விற்பனையாளர்]
ஸ்ரேசன்வீதி - கிளிநொச்சி

**யாழ். ஹோட்டல் அன் பேக்கரி**
கண்டிவீதி - கிளிநொச்சி.

**தருமராசா ஸ்தாபனம்**
[பசளை-கிருமிநாசினி- இயந்திர உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்]
கண்டிவீதி, (போன்:275) பரந்தன்.

**ராசம் கூல்பார் அன் கிறீம்ஹவுஸ்**
[சுவீப்ரிக்கற்-பத்திரிகை-சஞ்சிகை விற்பனையாளர்]
பஸ்நிலையம் - கிளிநொச்சி.

**சித்தி விலாஸ்**
(சைவபோசனசாலை)
கண்டிவீதி - கிளிநொச்சி.

**நொர்தேன் கெமிக்கல்ஸ்**
[பசளை-விவசாய இரசாயனம் விற்பனையாளர்]
கண்டிவீதி - கிளிநொச்சி.

**சாறிஎம்போறியம்**
[சண்முகாதியேட்டர் முன்பாக]
கண்டிவீதி - கிளிநொச்சி-

**கி ற வு ண் மி ல்**
(நெல்உடைத்தல்-குற்றுதல்-அரிசி, மாவு, மிளகாய் அரைத்தல், பிளேட் வெட்டுதல்)
எமர்சன்வீதி, கரடிப்போக்கு - கிளிநொச்சி.

**ஹரே கிருஷ்ண ஒலிஅமைப்பாளர்**
[ஒலிஅமைப்பு-பாடல் ரிகாடிங்-நாடகமன்றம்]
கந்தசாமிகோவிலடி, கண்டிவீதி-கிளிநொச்சி.

**வே. தருமலிங்கம் சகோதரர்கள்**

**முருகன் ஸ்ரோர்ஸ்**
கறடிப்போக்கு (போன்: 229) கிளிநொச்சி.

**"ஆர் த ன் ஸ்"**
[உரம்-விவசாய இரசாயனப் பொருட்கள்-சீமெந்து விநியோகம்]
கந்தசாமிகோவில் முன்பாக கண்டிவீதி, கிளிநொச்சி.

**சண்முகா தியேட்டர்**
[கிளிநொச்சி]
சிவாஜி - ஜெமினி நடித்த
**உனக்காக நான்**
தினசரி 3 காட்சிகள்
குறிப்பு:- 17ந் திகதி 5 காட்சிகள்
2-30, 6-30, 9-30, 12-30, 3-30

**வைத்திலிங்கம் அன் சன்ஸ்**
[சில்லறை-மொத்த வியாபாரிகள்]
கண்டிவீதி - கிளிநொச்சி. போன்: 236

**கி றீ ம் க வு ஸ்**
கண்டிவீதி, (பரந்தன் சந்தி) பரந்தன். போன்:219

**ஹோட்டல் டீ தவளகிரி**
கரடிப்போக்கு - கிளிநொச்சி.

**கலா றேடர்ஸ்** (புடவை மாளிகை)
சண்முகா படமாளிகைக்குமுன், கிளிநொச்சி.

**டெல்டா ஹோட்டல்**
மக்கள் வங்கி அருகாமை - கிளிநொச்சி.

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
Friday Foster

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சிவாஜி—மஞ்சுளா
மன்னவன் வந்தானடி

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார்
சொல்லத்தான் நினைக்கிறேன்

வெற்றி முரசு கொட்டும் 3வது கடைசி வாரம்!
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642.
தினசரி 10-15, 2-15, 6-15, 10-00
ரஞ்சன், ரி. ஆர். ராஜகுமாரி நடித்த
சந்திரலேகா (புத்தம் புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன் (ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயகுமாரி-எஸ்.எஸ்.ஆர்.-தேவிகா நடித்த
சா ந் தி

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-விஜயகுமார் ஜெய்சித்ரா-தங்கவேலு
பொண்ணுக்கு தங்கமனசு (புதிய பிரதி)

REGAL Jaffna 5th&LAST CROWDED WEEK
Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஆ ல ய ம ணி (புதியபிரதி)

லிடோ (யாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தாய்க்குத்தலைமகன்

இன்று மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - வைஜந்திமாலா
சித்தூர் ராணி பத்மினி

வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-முத்துராமன் ஜெயலலிதா-நாகேஷ் நடித்த
ஒரு தாய் மக்கள் (புதிய பிரதி)

## தமிழர்களும்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

இடத்தில்தான் தேரில் சுவாமியும் வீற்றிருக்கிறார். இதயமே கோவில் என்பதைச் சைவம் வெளிப்படையாய் உணர்த்துகின்றது. எனவே உரிய முதன்மைக் கருத்துக்களைச் சொல்லும் சைவ சமயத்தவர்கள் ஆகிய நாங்களும் அவற்றை உரிய வழியில் கடைப்பிடித்தால் உயரிய நிலையடையலாம்.

நாம் தேடிப் போகவேண்டிய கடவுளே எம்மைத் தேடி வந்து உயரிய சைவ தத்துவத்தை விளக்கும் நாள் தேர்த் திருவிழா. அது திருவிழாக்களில் பெருவிழா. இவ்விழாவில் நம்மைத் தேடி இறைவன் புறப்பட முன்னர் நாம் அவரைத் தேடிப் புறப்படுவோம். இல்லையென்றால் நாம் மானிடராகவும் அதிலும் சைவராகவும் இருப்பதில் பயனில்லை அன்றோ.

--- சாந்தி

## இந்திய-ரஷ்ய உறவு:

# வாஜ்பாய் - பிரஷ்னேவ் ஒருமணி நேரம் பேச்சு

மாஸ்கோ, செப். 14

மூன்றாவதுஉலக நாடுகளுடனான இந்திய உறவு எது விதத்திலும் இந்திய- சோவியத்உறவுகளைப் பாதிக்காது.

இவ்வாறு இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் மாஸ்கோவில் ரஷ்ய ஜனாதிபதி திரு. பிரஷ்னேவிடம் தெரிவித்துள்ளார்.

திரு. வாஜ்பாயும் திரு. பிரஷ்னேவும் மாஸ்கோவில் சுமார் ஒருமணி நேரம்வரை இந்திய - ரஷ்ய உறவு குறித்தும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் பேச்சு நடத்தினர்.

அடுத்த மாதம் தாம் மேற்கொள்ள இருக்கும் சீன விஜயம் குறித்தும் திரு. வாஜ்பாய் திரு. பிரஷ்னேவுக்கு எடுத்துக் கூறினார்.

அண்டை நாடுகளுடன் இந்தியா கொண்டுள்ள உறவு குறித்துத் தாம் திருப்தி அடைந்துள்ளதாகவும் இந்தியாவின் நிலையை ரஷ்யா நன்றாகப் புரிந்து கொண்டுள்ளது என்றும் திரு. பிரஷ்னேவ் திரு. வாஜ்பாயிடம் கூறினார். (இ)

# உலக சமாதானத்துக்கு ஆபத்து!

## --வால்ட்ஹெய்ம் எச்சரிக்கை

நியூயோர்க். செப், 14

வல்லரசு நாடுகள் மற்றைய நாடுகளின் பிராந்திய பிரச்சினைகளில் தலையிட்டு வருவதால் உலக சமாதானத்திற்கு பெரும் ஆபத்து தோன்றியுள்ளது.

இவ்வாறு ஐக்கியநாடுகள் சபை பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள்சபைக்குச் சமர்ப்பித்துள்ள ஆண்டறிக்கையிலேயே அவர்மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

பிராந்திய நாடுகளில் தமது செல்வாக்கைப்பரப்புவதற்காக வல்லரசுகளின் அவசியமற்ற கெடுபிடிகளில் ஈடுபடக்கூடாது என்றும் டாக்டர் வால்ட்ஹெய்ம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ)

## வேதாகமம்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

கள், கடவுள் வழிபாட்டிற்கு இன்றியமையாத ஆகமங்கள் ஆகிய மெய்நூல்களை சிறப்பு முறையில் மேற்கொண்டொழுகும் சிவநெறியினையே ''சைவம்'' என அழைப்பர் சான்றோர்.

### நால்வேதங்கள்

நால் வேதங்கள் அறத்தையும் சிவாகமங்கள் சிவனை அடையும் நெறியாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பாதங்களையும் சிறப்பு முறையில் எடுத்துரைப்பனவாகும். இவை இரண்டும் இறைவனால் அருளிச்செய்யப் பெற்றவையாகும். மேலும் வேத மோடாகமம் மெய்யாம் இறைவனூல் ஒதும் பொதுவுஞ் சிறப்புப் பெற்றுள்ளன'' என இவ்விரண்டையும் குறிப்பிடுகின்றார் திருமூலர். அத்தோடு ''உலகியல் வேத நூலொழுக்க மென்பதும் நிலவு மெய்ந்நெறி சிவநெறியதென்பதும்'' என்றும் ''வேதப்பயனும் சைவமும் போல்'' என்றும் சேக்கிழார் சுவாமிகள் குறிப்பதிலிருந்தும் வேதநூல்களில் காணப் பெறும் கருத்துக்கள் உலகியல் நடைமுறைகளுக்கு ஒத்தவை என்பதும் வேதநெறியின் மேலாக அதன் முடிந்த பயனைத் திகழும் சிறப்புடையது திருநெறிய சைவம் என்பதும் நன்கு தெளியப்படும். (வளரும்)

## கிளிநொச்சி...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒழுங்குகள் நடைபெற்றது.

ஆவணிமாத சுவாதி நட்சத்திரத்தில் கொடியேற்று உற்சவம் ஆரம்பமாகி ஆவணிப் பௌர்ணமி தினத்தன்று, கிளிநொச்சிக் குளக்கரையில் தீர்த்தோற்சவம் நடைபெறும் இக்காலத்தில் இப்பகுதியில் வாழும் சைவ அன்பர்கள் ஆயிரக்கணக்காக குளக்கரையில்கூடி முருக தீர்த்தம் ஆடுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆலயம் இன்னும் முழுமை பெறவில்லை. 'கோபுரதரிசனம் கோடி புண்ணியம்' என்பார்கள். இப்பகுதி மக்களுக்கு இன்னமும் கோபுரதரிசனம் கிடைக்கவில்லை. முருகன் திருவருளும், இப்பகுதி மக்களின் மனமும் ஒருமைப்பட்டால் இராசகோபுரத்துடன் முருகன் ஆலயம் புதுமெருகுடன் காட்சிதரும் நாள் வெகு தொலைவில் இல்லை. இப்பணி நிறைவேற நல்ல உள்ளங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் கோவிலுக்கு ஒரு தேர்இன்மை பெருங்குறை. வயல்சூழ்ந்த இப்பிரதேசத்தில் செல்வக்குமரனுக்கு ஒரு சித்திரத்தேர் செய்வது கஷ்டமான காரியமல்ல எல்லோர் உள்ளத்திலும் முருகன் அருள் செய்தால் வெகு சுலபமாக ஒரு தேரினை செய்துமுடிக்க முடியும். இப்பணிகளை நிறைவேற்ற முன்னின்றுழைக்க அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

# இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 30-ந் திகதி
வெள்ளிக்கிழமை
(15-9-78)

**மேடம்:-** மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம், கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு, தாய்வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், வாகன நலனுக்கும் இன்று இடமுண்டு.

**இடபம்:-** வாகனச் சாரதிகளுக்கு இன்று சிறப்பான தினம், வரவிலும் திருப்தி காணப்படும், நல்லதைச் செய்வீர்கள், நலன் பெருகும்.

**மிதுனம்:-** இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும், எழுத்தாளர்களுக்கு புதிய படைப்புக்கான கரு கிடைக்கும், நாடகக் கலைஞர்களுக்குப் பொன்னான தினம்.

**கடகம்:-** ஏமாந்த நேரத்தில் சிலர் உங்களை வீழ்த்தி விடுவதற்கு திட்டம் போடுவார்கள், எந்தச் சந்தர்ப்பத்திலும் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது விரும்பத்தக்கது, கூட்டணியில் பிளவுக்கு இடமுண்டு, தனிமை நன்று

**சிங்கம்:-** கண்ணியமான காரியங்களை முடிப்பதில் வெற்றி காண்பீர்கள், சுற்றுடலில் செல்வாக்கு வளர்ச்சியடையும், சாதல் சிட்டுக்களுக்கு இன்று தேன்சொட்டும் தினம், எதிர்ப்புக்கள் மறைவதற்கிடமுண்டு.

**கன்னி:-** எதிலும் நன்றாக சிந்தித்த பின்பு செயலாற்றவும், நண்பர் ஒருவர் மூலம் நீங்கள் ஏமாற்றமடையலாம், வியாபாரிகளாயின் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும், திருப்தியற்ற தினம்.

**துலாம்:-** எண்ணிய கருமங்களில் வெற்றி கிடைக்கும், நீண்டநாள் தடை இன்று விலகக்கூடும், முதியவர் ஒருவர் உம்மை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வர், இனபந்துக்களின் கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு.

**விருச்சிகம்:-** வணிகத் துறையில் வகையான சந்தர்ப்பம் கிடைக்கும், இருப்பிட மாற்றம் ஏற்படின் சிறப்புடையதாகும், கடற்றொளிலாளர்களுக்கு திருப்திகரமான தினம்.

**தனுசு:-** மெச்சத்தகுந்த நடவடிக்கையின் மூலம் உங்களை துச்சமாக மதித்தவர்களைக்கூட அடிபணிய வைப்பீர்கள், பொருள் வளத்தில் புதுப் பொலிவு காணப்படும், சிலருக்கு பிறந்தகத்தின் எண்ணம் தலைதூக்கலாம்.

**மகரம்:-** சிறிய காரியத்தை முடிப்பதற்கும் அதிக பணத்தை செலவு செய்வீர்கள், ஆடம்பரப் போக்கினால் கடன் படவும் நேரிடலாம், உறங்கிக் கிடந்த பகை மீண்டும் தலைதூக்க ஆரம்பிக்கும், அவதானம் வேண்டும்.

**கும்பம்:-** குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கி மறையும், மனதில் அமைதி குன்றும், விஷமிகளின் புனைந்துரைகளால் ஆத்திரம் அதிகரிக்கும்.

**மீனம்:-** நலன்தரும் சம்பவங்கள் இடம பெறும், நலிவு சொல்லாமல் பறக்கும் இல்லத்தில் இனிமை பிறக்கும், சுபமான தினம.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# பொலிஸ்புலன்விசாரணையில் அரசியல் தலையீடு இருந்தது

## ஆணைக்குழுமுன் சாட்சியம்

(கொழும்பு)

முன்னைய ஆட்சிக்காலத்தில் பொலிஸ் புலன் விசாரணைகளில் அரசியல் தலையீடு இருந்தது என்று, ஜனாதிபதி விசேஷ ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் சாட்சியமளித்த சி. ஐ. டி. பொலிஸ் அத்தியட்சகர் திரு. எம். டி. ஏ. ராஜபக்ஸ தெரிவித்தார்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா முன்னர் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்தபொழுது, அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படுமென்று அவர் செய்து கொண்ட முறைப்பாடு தொடர்பாக மேற்கொள்ளப் பட்ட புலன் விசாரணைகள் பற்றி நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது.

''திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா செய்துகொண்ட முறைப்பாடு தொடர்பாகப் பொலிஸ் புலன் விசாரணையில் நிறைய அரசியல் தலையீடு இருந்தது. பிரதமரின் முன் அனுமதியின்றி அரசியல்வாதிகள்பற்றிய விசாரணைகள் நிறுத்தப்படக்கூடாது என்று முன்னாள் நீதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கூறியிருந்தார் மாவத்தகம கொலை வழக்கு பற்றிய புலன் விசாரணை முடியுமுன்னரே, இதில் சம்பந்தப்பட்ட பிரேமச்சந்திராவை குற்றவாளியாக்குமாறு திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பணித்திருந்தார். ''ஏழாண்டு கால சாபக்கேடு'' என்று திரு விக்கிரமசூரியா ஒரு புத்தகம்

[6-ம் பக்கம் பார்க்க]

# நியமனம் செய்த....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குழப்பமுறுவதால் உண்மை நிலையை விளக்குவது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளனுகிய எனது கடமைமாகும்.

திரு. மு. சிவசிதம்பரத்தை தற்காலிகத் தலைவராகவும், தன்னைத் தற்காலிகப் பொதுச் செயலாளராகவும் தெரிவு செய்த கூட்டம் பொதுச் சபைக் கூட்டம் என வேண்டும் என்றே உண்மைக்குமாருக திரு. தா. சிவசிதம்பரம் கூறியுள்ளார், 6-3-77-ல் நடைபெற்ற கூட்டம் நிர்வாக சபைக் கூட்டம்தான் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் மறைவின்பின் கட்சியின் இணைச் செயலாளருள் ஒருவரான திரு. தா. சங்கரப்பிள்ளை முதன் முதலாக 26-2-77-ல் செயற்குழுக் கூட்டம் கூடுவதுபற்றி விடுத்த அறிவித்தலின் மூலம் நாம் இதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். இக்கூட்டம்தான் ஒத்திவைக்கப்பட்டு 6-3-77-ல் நடைபெற்றது. இச்செய்தியை வெளியிட்ட பத்திரிகைகளில் இருந்து இதன் உண்மையை அறிய முடியும். இச்செயற்குழுக் கூட்டத்தில்தான் இரு சிவசிதம்பரங்களும தற்காலிகமாக நியமிக்கப்பட்டனர். நியமனம செய்வதற்குச் செயற்குழுவுக்கு அதிகாரம இருப்பதுபோல, ஒழுங்கு நடவடிக்கையின் பேரில் நீக்குவதற்கும அதிகாரம உண்டு. கட்சியின் சட்ட திட்டங்கள் இதனைத் தெளிவாக வலியுறுத்துகின்றன.

கட்சியின் ஆயுட்கால உறுப்பினர்கள், உப தலைவர்கள், இணைச்செயலாளர்கள், மகளிர் முன்னணித் தலைவி, வாலிப முன்னணிச் செயலாளர்கள் மற்றும் கட்சி மகாநாட்டில் தெரிவுசெய்யப்பட்ட அத்தனை செயற்குழு உறுப்பினர்களும் உறுப்புரிமை அற்றவர்கள் என்று கற்பனை பண்ணியேனும் சொல்ல கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்ட திரு. தா. சிவசிதம்பரத்திற்கு எள்ளளவேனும் உரிமையில்லை கட்சியின் முதுபெரும் தொண்டர்களை, உறுப்பினர்களைப் பதவிக்காக இடைக்காலத்தில் கட்சியில் சேர்ந்தவர்கள் நாக்கூசாது உறுப்புரிமை அற்றவர்கள் என்கிறார்கள்.

இரு சிவசிதம்பரங்களையும் யும் தற்காலிகப் பதவிகளுக்குத் தெரிவுசெய்யச் செயற்குழுக்கூட்டத்தைக் கூட்டுவதற்கு திரு. சங்கரப்பிள்ளைக்கு இருந்தஅதிகாரம் இருசிவசிதம்பரங்களையும் விலக்குவதற்காக அதுவும் பெரும்பான்மை செயற்குழுவினரின் எழுத்து மூலமான வேண்டுகோளின் படி, கட்சியாப்பிற்கிணங்க கூட்டும்போதும் இருந்தது. நம்பிக்கை வைத்துத் தற்காலிகப் பதவிகளை இரு சிவசிதம்பரங்களுக்கும் வழங்கிய போது உறுப்புரிமை உள்ளவர்களாக இருந்த செயற்குழு உறுப்பினர்கள், அவர்களை கட்சியிலிருந்து நீக்கியபோதும் கட்சி உறுப்புரிமை உள்ளவர்களே. உறுப்பினர்களில்லாமல் தலைவருமில்லை, செயலாளருமில்லை.

கட்சி உறுப்பினர் அல்ல என்றும் சுயநலமிகளுள் ஒருவர் என்றும் திரு. சங்கரப்பிள்ளையைக் குறிப்பிடும் திரு. தா. சிவசிதம்பரம் அதே திரு. சங்கரப்பிள்ளை கூட்டணியின் பொதுச்சபை உறுப்பினராகத் திரு. மு. சிவசிதம்பரத்தால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளதை அறிவாரா? திரு. சங்கரப்பிள்ளை கூட்டணி ஆவரங்கால் மகாநாட்டிற்குச் செல்லவும் இல்லை. அங்கத்துவத்துக்காகக் கூட்டணிக்கு விண்ணப்பிக்கவும் இல்லை. முக்கியமான காங்கிரஸ்கட்சி உறுப்பினர் என்ற முறையிலேயே நியமிக்கப்பட்டுள்ளார். இதனை மறுக்க முடியுமா?

திரு. தா. சிவசிதம்பரம் தமது அறிக்கையில் பல செயற்குழுக் கூட்டங்கள் முறையாகக் கூட்டப்பட்டு முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன'' என ஒருவித உள் நோக்கத்தோடு உண்மைக்கு மாருகச் சொல்லியுள்ளார். கட்சியின் உண்மையான செயற்குழு உறுப்பினர்கள் எவரும் அறியாமலேயே பல செயற்குழுக் கூட்டங்களா? அவற்றில் முக்கிய தீர்மானங்களா? தமிழ்க்காங்கிரஸ் விவகாரம் திரு. தா. சிவசிதம்பரத்தின் சொந்த வீட்டு விவகாரம் அல்ல. அவர் நினைத்ததுபோல் நடக்கவும் நடக்காததை நடந்ததுபோல் சொல்லவும், இதன்மூலம் யாரையாவது ஏமாற்றிவிடலாம் என அவர் நினைத்தால் அது அறியாமையேயாகும்.

இதுவரை காலமும் கட்சியில் அக்கறையில்லாதிருந்தவர்களுக்குக் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட பின் அக்கறை வந்தது ஏன்? தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுணப் பிழையாக இருக்கவேண்டும் ஏன்ற குணமும், புதிய தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட இருப்பதால் சொந்தக் கட்சியிலேயே செல்வாக்கில்லாத தங்களுக்கு கூட்டணி இடம் தராது என்ற மனப் பயமும் காரணமாக காங்கிரசில் அக்கறை உள்ளவர்கள் போல் நடிக்கிறார்கள். தாங்கள் இன்னமும் தற்காலிகத் தலைவராகவும, தற்காலிகப் பொதுச்செயலாளராகவும இருப்பதாக (இரு சிவசிதம்பரங்கள்) கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பவர்கள், தமிழரசுக்கட்சியின் சார்பில் திரு. காத்தைமுத்து சிவானந்தன் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்பட்டது போல் என்னையும் காங்கிரஸ் சார்பில் போட்டியிட அனுமதிப்பதன் மூலம கட்சியின் பதிவைக் காப்பாற்றுங்கள் என்று நான் கேட்டபோது மௌனம் சாதித்தவர்கள் கட்சியின் பதிவு நீக்கப்பட்ட பின்எந்த நடவடிக்கையும் எடுக்காதுஇருந்தவர்கள் தெஹிவளை உபதேர்தலில் அளித்த முதல் சந்தர்ப்பத்தின்போது கட்சிப் பதிவை மீளவும் பெறும் வாய்ப்பிருந்தும் அதனைச் செய்யத் தவறியவர்கள், கொழும்பு தெற்கு உப தேர்தலின்போது கட்சியின் பதிவை மீளப்பெறுவதற்காக நான் ஏற்ற ஒழுங்குகளைச் செய்தபின், கட்சி உறுப்பினர்கள் தமது துரோகத்தை அறிந்துவிடுவார்கள் என்பதினாலும் கட்சியின் தமது ஆதிக்கம் பறி போய்விடும என்ற அச்சத்தில் விண்ணப்பித்தவர்கள், கட்சி நலனில் சிறிதும் அக்கறையில்லாதவர்கள் கட்சியை வைத்துப்பிழைக்க விரும்பும் படு பிற்போக்குச் சாந்தர்ப்பவாதிசளான இவர்கள் பதவிகளில் இருந்தபோது கூடிய கூட்டங்கள் எத்தனை? எந்தப் பத்திரிகைகளிலாவது கூட்டங்கள் நடைபெற்றதாகவோ, எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்ன என்ருவது செய்திகள் வெளிவந்ததுண்டா? அவ்வாருயின் பத்திரிகை வெளியிடப்பட்ட தினத்தையும் பத்திரிகைகளின் பெயர்களையும் வெளியிடவும். கட்சி உறுப்பினர்களின் கருத்தறிந்து நடந்ததுண்டா? கட்சியின் கொள்கையை மீருமல் விசுவாசத்துடன் செயல்பட்டதுண்டா? கட்சியின் வளர்ச்சிக்காக இதுவரை சாதித்தது என்ன?

இனியும் இத்தகையவர்கள் காங்கிரசிற்காக நீலிக்கண்ணீர் வடிக்கத் தேவையில்லை. இத்தகையவர்கள் பதவிகளில் இருந்தும் கட்சியில் இருந்தும் சட்டப்படி நீக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களுக்குக் கட்சிமீது எந்தவிதமான உரிமையும் இல்லை. இதை மறுத்து ஏதாவது உரிமை இருக்கும் என்று கருதுகிறவர்கள் ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்ருர்கள். தங்களுக்குப் பயன்படாத கட்சியை அழித்துவிடவேண்டும் என்ற சுயநலம் பிடித்த சந்தர்ப்பவாதிகள் சிலர் செயல்படுகின்ருர்கள். இப்படியான மனப்பான்மை உள்ள மனிதர்களால்தான் தமிழ்ச் சமுதாயம் தாழ்ந்திருக்கிறது.

## பொலிஸ்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டார். இதுபற்றிய சகல விசாரணைக் குறிப்புகளையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு முன்னுள் பிரதமர் எம்மைப் பணித்திருந்தார்'' என்று சி. ஐ. டி. பொலிஸ் அத்தியட்சகர் திரு. ராஜபக்ஸ நேற்று முன்தினம் கமிஷன்முன் கூறினர். (ம)

## நன்றி

பாசத்தின் திருவுருவாய்த் திகழ்ந்த என் அன்னையும், யாழ். மத்தியகல்லூரி நூலகர் கா. மாணிக்கவாசகர், CECB, படவரைஞர் கா. கருணுநிதி ஆகியோரின் சிறியதாயாரும், திருமதி காசிப்பிள்ளை பகவதியம்மாவின் சகோதரியும் திருமதி கனகராசா பராசக்தியின் மைத்துனியுமாகியகாலஞ்சென்ற வைத்திலிங்கம் ஜெயலட்சுமி [ஜெயம்] அவர்களின் இறுதிச்சடங்கின்போது [4-9-78] சமுகந்தந்து அனுதாபம் தெரிவித்த உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வை. விவேகானந்தன், 15 முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

0322

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம்சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box 49, Telegram Eelanaadu" Telephone 389. Registred as a Newspaper in Srilanka

### சாவகச்சேரி நீதிமன்றத் துப்பாக்கிக் கொள்ளை:

# சந்தேகநபர்களை பிணையில்

## விடுமாறு சட்டத்தரணிகள் வாதம்

### பொலிஸ்தரப்பு கருத்தை அறிவதற்கு அவகாசம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிமன்ற துப்பாக்கிக் கொள்ளை, பஸ் கொள்ளை வழக்குகளில் சந்தேகநபர்களை பிணையில் விடுமாறு சந்தேகநபர்களின் சட்டத்தரணிகளின் விண்ணப்பம் தொடர்பாக பொலிஸ் தரப்பு கருத்துக்களை அறிவதற்காக இவ்வழக்கு இம்மாதம் 19-ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில், நேற்றுக்காலை இவ்வழக்கு கூப்பிடப்பட்டபோது பொலிஸ்தரப்பில் எவரும் ஆஜராகவில்லை. சந்தேகநபர்களான 42 தமிழ் இளைஞர்களும் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்), ஆர். ஈ. தம்பிரத்தினம், ஜிம்மி ராஜரத்தினம், கே. கிருஷ்ணகுமார், ஆர். மனோகரன், எஸ். லோகேஸ்வரன், பி. பாலசுப்பிரமணியம், சி. அம்பலவாணர், கு. விநோதன் ஆகியோர் ஆஜரானுர்கள்.

பஸ் கொள்ளை தொடர்பாக அடையாள அணிவகுப்புநடத்திய சாவகச்சேரி பதில்நீதிபதி திரு' சி. பாலகிருஷ்ணன், அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர்கள் எவரையும் சாட்சிகள் அடையாளம் காட்டவில்லையென நீதிபதியிடம் தெரிவித்தார்.

சந்தேகநபர்களில் அவர்களுக்கு எதிராக எவ்வித சாட்சியமும் இல்லாதவர்களை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் கேட்டுக்கொண்டார்.

பஸ் கொள்ளை தொடர்பான அடையாள அணிவகுப்பில் 18 சந்தேக நபர்கள்இடம் பெற்றனரென்றும், இரு சாட்சிகள் அவர்கள் எவரையும் அடையாளம் காட்டவில்லையென்றும், சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் கூறியபோது, அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டவில்லையானுலும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் சில பெயர்கள் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அதனுல் அவர்களை வைத்திருக்கிருர்களென்றும் நீதிபதி கூறினர்.

அப்படியானுல் அடையாளம் காட்டாதவர்களையும் வாக்குமூலங்களில் பெயர்கள் கூறப்படாதவர்களையும் ஏன் வைத்திருக்கவேண்டும்? அவர்களைப் பிணையில் விடலாமே என்று சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினர்.

சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் சந்தேகநபர்களைப் பிணையில் விடுமாறு சட்ட ஆதாரங்களைக் காட்டி வாதாடினர்.

சட்டத்தரணி ஜிம்மி ராஜரத்தினம் கடந்த தவணையின் போது அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டும் என்ற காரணத்தைக் காட்டி பொலிசார் சந்தேக நபர்களை பிணையில் விடக்கூடாதென ஆட்சேபம் தெரிவித்தனர். அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. அதில் 18 சந்தேகநபர்கள் இடம்பெற்றனர். பஸ் கண்டக்டரும் பிரயாணியும் இரண்டுசாட்சிகளாக வந்தனர். வேறுசாட்சிகள் வரவில்லை. ஒவ்வொருவரையும் ஆறுதலாக நன்கு அவதானித்துப் பார்த்தபின் சாட்சிகள் எவரையும் அடையாளம் காட்டவில்லை. சந்தேக நபர்கள் எவரும் அங்கில்லை என்பதை அடையாள அணிவகுப்பு காட்டிவிட்டது. இந்த சந்தேக நபர்களால் எவ்வித குற்றமும் நடந்ததாக சாட்சியமில்லை.

அடையாள அணிவகுப்பில் முக்கியமான இருசாட்சிகள் சந்தேகநபர்களை அடையாளம் காட்டவில்லை.

சந்தேகநபர்கள் பகிரங்கமாக கோர்ட்டிற்கு கொண்டுவரப்பட்டு விட்டதால் இன்னெரு அடையாள அணிவகுப்பு நடத்த முடியாதென்று சட்டத்தரணி ஜிம்மி ராஜரத்தினம் கூறினர்.

நேற்று பொலிஸ்தரப்பில் எவரும் கோர்ட்டில் ஆஜராகாதினுல் பிணைதொடர்பாக பொலிஸ் கருத்துக்களை அறிவதற்காக நீதிபதி வழக்கை இம்மாதம் 19ம்தேதிக்கு ஒத்திவைத்தார். (க)

## இளம் மனைவி மரணம்

### பகிரங்கத் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

மணமான இளம் பெண்ணின் கருச்சிதைவின் பின் ஏற்பட்ட மரணத்தில் வைத்திய அறிக்கைப்பத்திரம் ஏற்படுத்திய சந்தேகத்தை, காலஞ்சென்றவரின் கணவனது சாட்சியம் அதிகப்படுத்தியதால் மரணவிசாரணை அதிகாரி, பகிரங்கத் தீர்ப்புக்கு உத்தரவிட்டார்.

கட்டுவன் தெற்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் ஈஸ்வரதேவி (வயது29) என்பவரது மரணம் தொடர்பாக யாழ். மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ். எஸ் பிரான்சிஸ் விசாரணை நடாத்தினர்.

விசாரணையின் போது காலஞ் சென்றவரது வைத்திய அறிக்கைப்பத்திரத்தில் முறையற்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கருச்சிதைவாலும் காலஞ்சென்றவர் நோயுற்று மரணமெய்தியிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

காலஞ்சென்றவரின் கணவனுகிய பாலசுப்பிரமணியம் தனது சாட்சியத்தில் மனைவி முட்டு காரணமாகவே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாரென்றும், அவருக்கு கருச்சிதைவு ஏற்பட்டது தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார். (கூ)

## இன்று

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில்தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது.

ஃ ஃ ஃ

தொண்டமாஞறு செல்வச் சந்நிதி தேர்உற்சவமும் இன்று நடைபெறுகிறது.

# கொட்டில் தீப்பற்றி மனநோயாளி கருகி மரணம்

### யாழ். நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பத்து வருடங்களாக மனநோயால் பாதிக்கப்பட்டிருந்தவர், படுத்திருந்த கொட்டில் பற்றிஎரிந்தபோது, உள்ளே படுத்திருந்ததால் உடல் கருகி மரணமான பரிதாபகரமான சம்பவமொன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் நடைபெற்றுள்ளது.

இவ்வாறு மரணமானவர் நாகமுத்து பொன்னுத்துரை வயது (35) என்பவராவர்.

காலஞ்சென்றவர் கடந்த பத்துவருடங்களாக மனநோயால் பாதிககப்பட்டிருந்ததாகவும், இடைக்கிடைநோய் வாய்ப்படுபவரென்றும் சம்பவதினம் இறந்தவரின் மகன் பக்கத்திலுள்ள மாமியார் வீட்டிலிருந்தபோது பொன்னுத்துரை படுத்திருந்த கொட்டில் தீப்பற்றி எரிந்ததென்றும். தீயை அணைக்க முடியாதநிலையில் உடல்கருகிய நிலையில் காலஞ்சென்றவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது இறந்துவிட்டதாகவும் மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இம்மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ். எஸ். பிரான்சிஸ் விபத்து மரணமென்று தீர்ப்பளித்தார். (கூ-உ)